**செ. கு. எண்: 191** **நாள்: 02.11.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 2.11.2018</u>

சென்னை புறநகர், பூந்தமல்லியில் தீயணைப்பாளராகப் பணியாற்றி வந்த திரு. ஆர். சதீஷ் என்பவர் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், முதுநிலை தீயணைப்பாளராகப் பணிபுரிந்து வந்த திரு. அ.த நடராஜன் என்பவர் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் யந்திர கம்பியர் ஓட்டியாகப் பணிபுரிந்து வந்த திரு. வீ. திருமலைராஜ் என்பவர் உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், தீத்தடுப்புக் குழு, நிலைய அலுவலர் திரு. ம. சுந்தரமூர்த்தி என்பவர் உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூரில் தீ அணைப்பாளர் ஓட்டியாக பணிபுரிந்து வந்த திரு. வி.ஆர். செல்வராஜ் என்பவர் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

தீயணைப்பு- மீட்புப்பணிகள் துறையில் பணிபுரிந்து உயிரிழந்த தீயணைப்பாளர் மற்றும் யந்திர கம்பியர் ஓட்டி ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்த மேற்கண்ட **ஐந்து** நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**